ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2141/52 - 2019 සැප්තැම්බර් මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.09.19

*2141/52 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கு உரித்தான எவையேனும் அசையாத அல்லது அசையும் ஆதனங்களை கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு இன்றேல் பாதிப்புக்குக் காரணமாகும் விதத்திலோ அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்தும் பணிக்கு தடங்கலாகும் விதத்திலோ பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள்**

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ(4)(அ) உப உறுப்புரையின்கீழ், தேர்தல் ஆணைக்குழுவினால் உருவாக்கப்படுகின்ற அரசாங்கத்திற்கு அல்லது கூட்டுத்தாபனமொன்றுக்கு உரித்தான எவையேனும் அசையாத அல்லது அசையும் ஆதனங்களை தேர்தலொன்றின் போது கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களின் ஊக்குவிப்பு இன்றேல் பாதிப்புக்கு காரணமாகும் விதத்திலோ அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தடங்கலாகும் விதத்திலோ பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பிரகடனப்படுத்தப்படுகின்றன.*

| | | |
|---|---|---|
| *மஹிந்த தேசப்பிரிய,* | *என். ஜே. அபேசேகர,* | *எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,* |
| *தவிசாளர்,* | *அங்கத்தவர்,* | *அங்கத்தவர்,* |
| *தேர்தல் ஆணைக்குழு.* | *தேர்தல் ஆணைக்குழு.* | *தேர்தல் ஆணைக்குழு.* |

*தேர்தல்கள் செயலகம்,*
*சரண மாவத்தை,*
*ராஜகிரிய,*
*2019, செத்தெம்பர் 19.*

1A - PG 4655 — 1517 (2019/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அரசியலமைப்பின் 104ஆ(4)(அ) உறுப்புரைக்கமைய, "தேர்தல் காலத்தின்போது அரசுக்கு அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையாஆதனமொன்றை"ஏதேனுமோர்அரசியல் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைத் தேர்ந்தெடுப்பதை ஊக்குவிக்கின்ற அல்லது தடுக்கின்ற பணிக்காக ஏதேனுமோர் அரசியல் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் பயன்படுத்துவதை தடை செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு. அவ்வுறுப்புரையின் (ஆ) ஆம் உபஉறுப்புரையின்கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் விடுக்கப்படுகின்ற பணிப்புக்களை அமுல்படுத்துவதற்கு அரசுக்கு உரித்தான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கட்டுப்பட்டுள்ளனர். ஆதலால், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அலுவலர்களும் இவ்வேற்பாடுகளுக்கு அமைவாக நடந்து கொள்ளல் வேண்டும். அதேபோன்று தமது கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து அரசாங்க அலுவலர்களும் இப்பணிப்புக்கு அமைவாக நடந்துகொள்கிறார்கள் என்பதற்கு நிறுவனத் தலைவர் பொறுப்பாதல் வேண்டும். இப்பணிப்புக்கள் அரசாங்க அமைச்சுக்கள், ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள், மாகாணசபைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள், அரசாங்க வங்கிகள், அரசாங்க பல்கலைக்கழகங்கள் போன்ற அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அரசாங்கத்தால் கையேற்கப்பட்டுள்ள கம்பனிகளுக்கும் வலுவுடையதாகும்.

*02.* **அலுவலர்கள்**

I. அரசாங்க அலுவலர்களின் ஆற்றல்கள், அறிவு, அவர்களின் காலநேரம் என்பனவும் அரச ஆதனமொன்றாவதென்பதனால் எந்தவோர் அரச அலுவலரும் தனது அலுவலக நேரத்தில் அதாவது கடமைக்கு அறிக்கை இட்டுள்ள நேரத்திற்குள் அல்லது கடமை விடுமுறை பெற்றுக் கொண்டுள்ள போது அலுவலகத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ அரசியல் ரீதியான ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. அரசியல் உரிமைகள்அற்ற அலுவலர்கள் விடுமுறைகளைப் பெற்றுக்கொண்டேனும் அரசியல் ரீதியான பணிகளில் ஈடுபடக்கூடாது. அரசியல் உரிமைகள் உள்ள அலுவலர்களும் கூட அலுவலக நேரத்திற்குள் அரசியல்ரீதியான பணிகளில் ஈடுபடக்கூடாதென்பதோடு, அவ்வாறு ஈடுபடுவதாயின் முன்கூட்டியே தனிப்பட்ட அல்லது விசேட விடுமுறை அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

II. எந்தவோர் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அரசியல் நடவடிக்கைகளுக்காக அரச ஆதனங்கள் அதாவது ஏனைய அரச அலுவலர்கள், வாகனங்கள், பிரச்சாரக் கருவிகள், அச்சு இயந்திரங்கள், தொலைபேசி வசதிகள் போன்ற அரசுக்கு உரித்தான எதனையும் பயன்படுத்தும் உரிமை கிடையாது. அவ்வாறு செய்தல் முழுமையாக தடை செய்யப்பட்டவொன்றாகும்.

III. அரசியலமைப்பு சபையினால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்களின் அதிகாரங்களின்கீழ் முறையாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தவிர்ந்த இக்காலப்பகுதியில் அரசாங்க நிறுவனங்களில் எவ்விதத்திலும் ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படுவதைத் தவிர்த்துகொள்ளுதல் வேண்டும்.

IV. தேர்தல் வெளிப்படுத்தப்பட முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அலுவலர்களின் ஆட்சேர்ப்புக்கள்/ பதவி உயர்வுகளோடு தொடர்புடைய நாடளாவிய ரீதியிலான நடைமுறையொன்று அல்லது உள்ளக பதவி உயர்வு செயல்திட்டமொன்று கால ஒத்தி வைப்பின்றி செயற்படுத்தப்பட வேண்டும் என்று அமைச்சின் செயலாளர் அல்லது நிறுவனத் தலைவர்கள் எதிர்பார்க்கின்ற போதும் முழு நாட்டுக்கும் செயற்படத்தக்கவாறு அரசாங்க சேவையோடு அல்லது அரச நிறுவனங்களோடு தொடர்புடையதாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள்/ பதவி உயர்வுகள் என்பன முறையாகவும் அரசியல் தலையீடுகளின்றியும் மேற்கொள்ளப்படுவதாக உரிய அதிகாரிகளுக்கு சந்தேகத்துக்கிடமின்றி உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான சந்தர்ப்பங்களில் அதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டை வழங்க முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அதற்காக ஆணைக்குழுவுக்கு கோரிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

V. சுகநலப் பாதுகாப்பு, சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தடைப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் அத்தியாவசிய சேவைகளைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்காகவும் பிரதேச அல்லது மாகாண மட்டத்தில் அரசாங்க ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதாயின் அத்தகைய ஆட்சேர்ப்புக்களுக்குக் கூட தேர்தல் ஆணைக்குழுவின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் எவ்வித அரசியல் தலையீடுமின்றி வெளிக்காட்டு தன்மையுடன் கூடியதாக அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு உரிய அலுவலர்களைச் சாரும்.

VI. தேர்தல் நடாத்தப்படவுள்ள பிரதேசங்களில் தேர்தல் கடமைக்காகப் பயன்படுத்துவதற்கென எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அலுவலர்களினதும் வழமையான இடமாற்றங்கள் வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்கள் கழியும் வரை இடைநிறுத்தப்படும். தேர்தல் கடமைகளுக்காக பயன்படுத்தப்படாத அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் அலுவலர்கள் தேர்தல் காலப்பகுதிக்குள் இடமாற்றம் செய்யப்படும் போது அரசியல் காரணங்களுக்காக இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படக் கூடாதென்பதோடு, அவ்வாறுமேற்கொண்டதாக முறைப்பாடுகள் கிடைக்காதவாறு உரிய இடமாற்றங்களை மேற்கொள்ளல் அனைத்து அதிகாரிகளினதும் பொறுப்பாகும். ஒழுக்காற்று ஆணைக்கமைய மேற்கொள்ளப்படுகின்ற

இடமாற்றங்களுக்காக இப்பணிப்பு வலுவுடையதாக காணப்படாதென்பதோடு, விசேட சந்தர்ப்பங்களில் அல்லது சேவைத் தேவைப்பாட்டுக்கமைய, இடமாற்றங்களை மேற்கொள்ள வேண்டிவரின், அதுபற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்து முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

VII. *அரசியல் உரிமைகள் அற்ற அரசாங்க அலுவலரொருவர் தனது தனிப்பட்ட சமூக வலைத்தளக் கணக்கொன்றை அல்லது வேறுகணக்கொன்றைப் பயன்படுத்தி ஏதேனும் அரசியல் கட்சியொன்றை அல்லது வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதற்கு அல்லது பாதிப்பினை ஏற்படுத்துவதற்கு ஏதேனும் ஒரு பிரச்சாரத்தை அல்லது வெளிப்படுத்துகையை மேற்கொள்வது குற்றமாகும், அரசியல் உரிமைகளுள்ள அரசாங்க அலுவலர் ஒருவராயினும் அப்பிரச்சாரமொன்றை அரச வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடாதென்பதோடு, வெறுப்பூட்டத்தக்க வெளிப்படுத்துகைகளை மேற்கொள்ளல் அல்லது பகிரங்கப்படுத்தல் குற்றமாகும்.*

*03.* **வைபவங்கள், நடமாடும் சேவைகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகள்**

I. *வைபவங்கள்*

*தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்க நிதியை செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறு விதத்திலான அடிக்கல் நாட்டு விழாக்கள், திறப்பு விழாக்கள், மக்கள் கையளிப்பு நிகழ்வுகள் போன்ற வைபவங்களை அரசியல்வாதிகளின் பங்கேற்புடன் மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள் அவர்களினால் வெளிப்படுத்தப்படுவதாலும் இத்தகைய சந்தர்ப்பங்கள் வைபவ ரீதியாக நடாத்தப்படுவதனூடாக ஏதேனும் ஒரு கட்சி/ ஒருகுழு/ வேட்பாளர் ஒருவர் ஊக்குவிக்கப்படல் அல்லது வேறொரு கட்சிக்கு/குழுவுக்கு/ வேட்பாளர் ஒருவருக்கு பாதிப்பு ஏற்படக்கூடுமாதலால் இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய வைபவங்களை மற்றும் பணிகளை ஒழுங்கமைப்பதிலிருந்தும் நடாத்துவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்கு முன்னர் திகதி நிர்ணயிக்கப்பட்ட அத்தகைய வைபவங்களை ரத்து செய்யவோ அல்லது ஒத்தி வைக்கவோ முடியாதவிடத்து, அத்தகைய வைபவங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட்டு அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். எவ்விதத்திலும் அரசாங்க நிதியை செலவிட்டு இத்தகைய வைபவங்கள் நடாத்தப்படுமாயின் அத்தகைய சந்தர்ப்பமொன்று எவையேனும் கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்களின் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்துமாயின் அது தொடர்பாக வைபவத்தை ஒழுங்கமைத்த அலுவலர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதேபோன்று இத்தேர்தல் காலப்பகுதியில் நடாத்தப்படுகின்ற வைபவங்கள் தொடர்பாக கண்காணித்து அறிக்கைகளை வைத்திருப்பதற்காக உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களை முன்கூட்டியே அறிவூட்டுவதற்கு இப்பணிகளை ஒழுங்கமைக்கின்ற அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இத்தகைய கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்கள் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்தத்தக்கதாக எவ்வகையான வெளிப்படுத்துகையை மேற்கொள்ளல் செயற்பாடுகளை ஆற்றல் கொடிகள்/ பதாகைகள்/ சுவரொட்டிகள்/ பத்திரங்கள்/ துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தலும் பகிர்ந்தளித்தலும் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது. அத்தகைய பணிகளை தடுப்பதற்கு உரிய வைபவங்களை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதியீட்டம் வழங்குகின்ற அரசாங்க நிறுவனங்களும் அலுவலர்களும் கட்டுப்பட்டுள்ளனர்.*

II. *நடமாடும் சேவைகளும் வர்த்தக கண்காட்சிகளும்*

*மக்களுக்கு சேவை வழங்கும் நோக்கோடு அரசாங்க நிதியையும் அரச ஆதனங்களையும் செலவு செய்து நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் என்பவற்றினூடாக கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர் ஊக்குவிப்புகள் மேற்கொள்ளப்படும் போக்கு காணப்படுவதனால் இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய நடமாடும் சேவைகள் வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை ஒழுங்கமைப்பதிலிருந்தும் நடாத்துவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள், களியாட்டங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிட்டு அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். எந்த விதத்திலும் அரசாங்க நிதியை செலவழித்து இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை நிகழ்த்துகின்றபோது கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்கள் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பு நிகழுமாயின் அதுதொடர்பாக உரிய பணியை ஒழுங்கமைத்த அலுவலர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதே போன்று தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்தப்படுகின்ற இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை கண்காணித்து அறிக்கைகளை வைத்திருக்குமாறு உரிய மாவட்டங்களின் தெரிவத்தாட்சியாளர்களை முன்கூட்டியே அறிவூட்டுவதற்கு இப்பணிகளை ஒழுங்கமைக்கும் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இத்தகைய எந்த ஒரு நடமாடும் சேவை, வர்த்தக கண்காட்சி மற்றும் களியாட்டத்தில் அல்லது இத்தகையதொருவேறு சந்தர்ப்பத்தில் கட்சிகள்/ குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்காக அல்லது பாதிப்புக்காக எத்தகைய*

வெளிப்படுத்துகையையும் மேற்கொள்ளல் செயற்பாடுகளைஆற்றல் கொடிகள்/பதாகைகள்/சுவரொட்டிகள்/பத்திரங்கள்/துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தலும் பகிர்ந்தளித்தலும் முற்றாகத் தடையென்பதோடு, அத்தகைய பணிகளைத் தடுப்பதற்கு உரிய பணிகளை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதி வழங்குகின்ற அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

**04. வசதிகள், கொடைகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விசேட கருத்திட்டங்களை அமுலாக்கம் செய்தல்**

I. மக்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்காக அல்லது நாட்டில் அப்போது ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நீண்டகால அல்லது மத்தியகால விஷேட கருத்திட்டங்கள் மற்றும் வசதிகள் வழங்கும் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை தேர்தல் காரணமாக இடைநிறுத்த முடியாத போதிலும் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டதன் பின்னர், இத்தகைய விஷேட கருத்திட்டங்கள் அல்லது தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்களூடாக கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதற்காக பயன்படுத்த இடமளிக்கக்கூடாது.

II. தேர்தல் காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படுகின்ற இத்தகைய தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றினூடாக கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் நிகழ்கின்றனவாவென ஆணைக்குழு கண்காணிக்க உள்ளது.

III. தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத்தின் காணிகளைப் பகிர்ந்தளித்தல், அரசாங்கக் காணி உரிமைப் பத்திரங்கள் அல்லது வீடுகளின் உரிமைக் கையளிப்புக்கான உறுதிகளை வழங்குதல், பெருந்தோட்ட கைத்த அல்லது பயிரிடுகைக்காக மானியங்கள், பசளைகள், விவசாய உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், சுய தொழில் உபகரணங்கள், சைக்கிள்கள், சூரியவலு மின்சார விளக்குகள், வீடுகளைக் கட்டுவதற்கான கட்டிடப் பொருட்கள் போன்றவற்றைப் பகிர்ந்தளிக்கும் கருத்திட்டங்கள், வீட்டுக்கடன் விநியோகங்கள்/நட்ட ஈட்டுத் தொகை வழங்கல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல் நிறுத்தப்படல் வேண்டும். அவ்வாறு இடைநிறுத்தப்படுவதனால் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தடங்கல் ஏற்படுமெனத் தெரியவருமாயின் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். எவ்விதத்திலும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது அனுமதி வழங்கப்படுகின்ற இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது பணிகள் என்பவற்றை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டியிருப்பின் அப்பணிகளை அவ்விடயங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களின் பங்குபற்றலோடு மாத்திரம் எவ்வித கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் ஊக்குவிப்புகள் அல்லது பாதிப்புகள் நிகழாதவாறு செயற்படுத்தல் அப்பணிகளுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் பொறுப்பான அலுவலர்களின் கடமையாகும்.

**05. வாகனங்கள்**

i. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்துக்கு சொந்தமான மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள், கெப் வண்டிகள், பஸ் வண்டிகள் அனைத்து அரச வாகனங்களுக்கும் பொறுப்பாக உள்ள அலுவலர்கள் வாகனங்களை ஏதேனுமொரு அரசியல் கட்சியின், சுயேச்சைக் குழுவொன்றின், வேட்பாளரொருவரின் பிரச்சார நடவடிக்கைகளை ஊக்குவிப்புக்காக பயன்படுத்தாத விதத்தில் தேர்தல் காலப்பகுதிக்குள் வாகனகுழாத்தைப் பேணுதல் மற்றும் குறித்தொதுக்குதல் மிகக் கவனமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் (Assigned Vehicles) வாடகைக்கு பெறப்பட்டுள்ள கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்கள் என்பன கூட இதற்குள் உள்ளடக்கப்படல் வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இக்காலப்பகுதிக்குள் அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் தவிர மிக முக்கியமாக குழாங்களுக்கு குறித்து ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கான ஓட்டக் குறிப்புகள் முறையாக பேணப்படல் வேண்டும் என்பதோடு இந்தக் குறிப்புகளை பதவிநிலை அலுவலர் ஒருவர் அன்றாடம் பரிசீலித்து வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பது தொடர்பாக திருப்தி அடைதல் வேண்டும். கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக போலியாக ஓட்டக் குறிப்புகளை எழுதி அரசாங்க வாகனங்களை அரசியல் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் அல்லது அத்தகைய சட்டவிரோத விடயங்களுக்காக பயன்படுத்தாமல் இருப்பதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

ii. சனாதிபதி அவர்களின் பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்கள் தவிர்ந்த எந்த வாகனத்திற்கும் மோட்டார் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்பட்ட அடையாள பதிவிலக்கம் அற்ற விதத்தில் ஓடமுடியாது. ஆதலால் எவரேனுமோர் அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் அவர்களின் பணியாட்குழு அங்கத்தினர்கள் அனைவருக்கும் உரிய பதிவு இலக்கமற்ற அரசாங்கத்தின் அல்லது அரச நிறுவனங்களின் வாகனங்களை பயன்படுத்த முடியாது. அதனால் அனைத்து திணைக்களங்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் உரித்தான வாகனங்களை திருத்தக இலக்கங்களைப் பயன்படுத்தி (போலி இலக்கங்களை) ஓடுவதற்கு அவகாசமளிக்கக் கூடாது என்பதை அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

iii. அரசியல் பிரச்சாரப்பணிகளுக்காக விமானங்கள், ஹெலிகொப்டர்கள் அல்லது வேறு வாகனங்களை ஈடுபடுத்துவதற்காக அரசாங்க நிதி செலவிடப்படுவதில்லை என்பதை அனைத்து செயலாளர்களும் நிறுவனத் தலைவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

**06. அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசுக்குரிய ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியன.**

i. அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசுக்குரிய ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியன அரசின் வளங்களாகும். ஆதலால், இக்கட்டிடங்களில் அரசியல் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றை நடாத்தக்கூடாது. வழமையான காலப்பகுதியில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும்/ குழுவுக்கும் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடிந்த கட்டிடங்கள், மண்டபங்கள் தேர்தல் காலப்பகுதியிலும் முறையாக கட்டணம் அறவிடப்பட்டு எந்தவொரு கட்சிக்கும்/குழுவுக்கும் வேறுபாடு காட்டப்படாமல் வழங்கப்படுவதற்கு இவ்வேறுபாடுகளில் தடங்கல் இருப்பதாக கருதப்படக் கூடாது. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு, அரசாங்கத்துக்கு உரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவது முற்றாகத் தடையாகும். மாகாணங்களில் அமையப்பெற்றுள்ள அரசாங்கத்திற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு உரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் போன்றவை எந்தவோர் அரசியல்வாதிக்கும் அலுவலருக்கும் வேறொரு நபருக்கும் தேர்தல் காலப்பகுதிக்குள் முழு காலத்துக்குமென குறித்தொதுக்கிக் கொடுப்பதை தவிர்ந்து கொள்ளல் வேண்டும். அதேபோன்று அத்தகைய இடங்களில் தங்குகின்ற நபர்கள் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. அரசாங்கத்திற்கு உரித்தான கட்டிடங்கள், அவை அமையப்பெற்றுள்ள காணிகள் என்பவற்றில் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பாரிய அளவிலான உருவப்படங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தவும் இடமளிக்கக் கூடாது.

ii. அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றிற்கு உரித்தான விளையாட்டுத் திடல்கள், வெற்றுக் காணிகள், மண்டபங்கள் அல்லது அத்தகைய ஏனைய கட்டிடங்கள் அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள்/ வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கான பிரச்சாரக் கூட்டங்களுக்காக குறித்தொதுக்கும் போது எந்தவொரு கட்சிக்கோ சுயேச்சைக் குழுவுக்கோ வேட்பாளருக்கோ விசேட அக்கறையொன்றோ அல்லது முன்னுரிமையொன்றோ அல்லது குறைமதிப்பொன்று ஏற்படத்தக்கவாறு குறித்தொதுக்கக் கூடாது. அவ்விடங்கள், கட்டிடங்கள் என்பவற்றை குறித்தொதுக்குதல் வெளிக்காட்டுத் தன்மையுடன் கூடியதாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய இடங்களை ஏனைய கட்சிகளும் குழுக்களும் பெற்றுக்கொள்ள முடியாதவாறு எந்தவொரு கட்சிக்கோ அல்லது குழுவுக்கோ அல்லது வேட்பாளருக்கோ வேறு பணிகளுக்காக தொடர்ச்சியாக குறித்து ஒதுக்கி வைத்துக்கொள்ளக்கூடாது.

**07. பொதுவான விடயங்கள்**

i. அரசாங்க ஆதனங்கள் முக்கியமாக அரசாங்க நிறுவனங்கள், வாகனங்கள், பொருட்களாதியவை மற்றும் அலுவலர்கள் தேர்தலோடு தொடர்புடைய கட்சிகள்/ குழுக்கள் அல்லது வேட்பாளர் ஊக்குவிப்புக்காக பயன்படுத்தப்பட எந்தவொரு சந்தர்ப்பமும் வழங்கப்படக் கூடாது. தேர்தல் நடாத்தப்படுகின்ற பிரதேசங்களில் அவசரக் கடமைகளுக்காக விசேட அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றை முன்வைத்து கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர் ஊக்குவிப்பை (இல்லாவிடில் பாதிப்பை) ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்தின்/ அரச நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு/ அரச நிறுவனங்களுக்கு சொந்தமான அல்லது வாடகைக்கு அமர்த்திய வாகனங்களை வேறு அலுவலகங்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு இணைத்தல் அல்லது விடுவித்தல் போன்ற சட்ட ரீதியற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள எந்தவோர் அலுவலருக்கும் இடமளிக்கக் கூடாது. அரசாங்கத்தின், மாகாண சபைகளின், உள்ளூராட்சி சபைகளின் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரசாங்க வங்கிகள், நியதிச்சட்ட வேறு நிறுவனங்கள், அரச பல்கலைக்கழகங்கள் போன்ற எந்தவோர் அரச நிறுவனத்துக்கும் உரிய ஊடகப் பிரிவின் அலுவலர்கள், வாகனங்கள், கருவிகள் எந்தவொரு கட்சியினதும் குழுவினதும் வேட்பாளர்களினதும் ஊக்குவிப்பை மேம்படுத்துகின்ற பணிகளுக்காக ஈடுப்படுத்தக்கூடாது. சாதாரண நிலைமையின் கீழ் எந்தவொரு அரசாங்க நிறுவனத்திற்கும் உரிய மேடைகள், சோடனைகள், கருவிகள், வாகனங்கள், விமானங்கள், ஹெலிகொப்டர்கள் போன்ற வாடகை அடிப்படையில் வழங்கப்படுவதாயின் தேர்தல் காலத்துக்குள் அத்தகைய வாடகைக்கு வழங்கப்படல் அனைத்து கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு வெளிப்பாட்டுத் தன்மையுடன் கூடியதாக ஆற்றப்படல் வேண்டும்.

ii. அரசாங்க அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவோ அல்லது ஏதேனும் வருடாந்த/ நினைவு தின வைபவங்கள் ஆகியவற்றுக்காகவோ பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரச நிதியை பயன்படுத்தி தொலைக்காட்சி, வானொலி, செய்திப் பத்திரிகைகள் போன்ற ஊடகங்களூடாக அறிவித்தல் ஒலி/ ஒளிபரப்பு /பிரசுரித்தல் மூலமாகவோ அறிவித்தல் பலகைகளை பகிரங்க இடங்களில் காட்சிப்படுத்தல் மூலமோ எந்தவொரு கட்சி/ குழு/ வேட்பாளர் சார்பாகவும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளையோ பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையோ மேற்கொள்ளல் கூடாது.

iii. அனைத்து தனியார் கேபிள் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள், தனியார் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள், இணையத்தளங்கள், கையடக்க மற்றும் நிலையான தொலைபேசிச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் என்பன தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் சட்டங்களை மீறாதவிதத்திலும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக வழிகாட்டு நெறிகள், பணிப்புக்கள் மற்றும் அறிவுறுத்தல் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடந்து கொள்வதற்கு வகை கூறுதல் மேற்குறித்த தொடர்பாடல் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற தாபனங்களின் பொறுப்பொன்றாகவிருத்தல் வேண்டும்.

iv. கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களை ஊக்குவிக்கும் அல்லது பாதிக்கும் விதத்தில் விளக்குக் கம்பங்கள் மற்றும் தொலைபேசி கம்பித் தூண்கள் என்பவற்றில் பதாகைகள், சுவரொட்டிகள், கொடிகள், சோடனைகள் என்பவற்றை மேற்கொள்வதைத் தடுப்பது போன்றே பொதுப் பெருந்தெருக்கள் மீதும் இருமருங்கிலும் உள்ள பாதசாரிகள் மேடைகள் மீதும் கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களை ஊக்குவிக்கும் விதத்திலோ அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் விதத்திலோ மை பூசுதல் மூலமோ வேறேதேனும் முறையிலோ பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர்ப்பதற்குரிய அதிகார எல்லைக்குரிய பிரதேசத்தின் அரசாங்க நிறுவனங்கள் போன்றே குறித்த அதிகார எல்லைக்குள் அரச ஆதனங்களை கைவசம் வைத்துள்ள நிருவாகிகள் அல்லது உள்ளூர் அதிகாரசபை அலுவலர்கள் ஆகியோரின் பொறுப்பாகும்.

v. ஏதேனும் ஓர் அமைச்சு, திணைக்களம் அல்லது அரசநிறுவனம் தேர்தல் காலப்பகுதிக்கு முன்னர் நிர்மாணித்திருந்த அல்லது காட்சிப்படுத்தியிருந்த கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்குக் காரணமாகக் கூடிய விதத்தில் பகிரங்க இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள புகைப்படங்கள், பிரச்சாரப் பலகைகள், கொடிகள், பதாகைகள் மற்றும் சோடனைகள் ஆகியவற்றை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்துவதிலிருந்து அகற்றுவதற்கு அவ்வரச நிறுவனங்களின் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உள்ளூர் அதிகார சபை எல்லைக்குள் பகிரங்க இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்குவிப்பு பிரச்சார பலகைகள், கொடிகள், பதாகைகள் மற்றும் சோடனைகள் ஆகியவற்றை அகற்றுவதற்கு உள்ளூர் அதிகார சபைகளின் தலைவர்கள் அந்நிறுவனங்களின் ஆணையாளர்களும் செயலாளர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

vi. தேர்தலொன்றின்போது கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் என்பவற்றிற்காக அரச ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் விதத்திலான இத்தடை உத்தரவு எத்தகைய நெகிழ்ச்சிக்கும் இடமின்றி கடுமையாக செயற்படுத்தப்படும். ஒவ்வொரு அமைச்சின் கீழும் உள்ள அனைத்து திணைக்களங்களும், அரசாங்க கூட்டுத்தாபனங்களும் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களும் இதுதொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல்வேண்டும். அதேபோன்று அத்தகைய அனைத்து நிறுவனங்களினதும் அலுவலர்கள் இவ்வறிவுறுத்தல்களுக்கும் பணிப்புக்ககளுக்கும் அமைவாக நடந்து கொள்கின்றார்களென அமைச்சுக்களின் செயலாளர்களும் நிறுவனங்களின் தலைவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் அத்தியாவசியமானதாகும்.

vii. தேர்தலோடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் உரிய சட்ட வலுவாக்கத்திற்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரச அதிகாரிகளினதும் பணியாக இருக்க வேண்டுமென அரசியலமைப்பின் 104ஆ(2) ஆம் உறுப்புரையில் காணப்படுகின்ற இக்குறிப்பீடு தொடர்பாக அரச அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுதல் அவசியமாகும்.

viii. இவ்வேற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் அமைச்சரவைப் பணியாளர்கள் ஆகியோரை அறிவூட்டுவது அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளதோடு, மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் ஏனைய அமைச்சர்கள் அவர்களின் பணியாட் குழுவினர்கள் ஆகியோரை அறிவூட்டல் பிரதம செயலாளர் உரிய மாகாண சபையின் அமைச்சின் செயலாளர்களுக்கு உரியதாகும் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

ix. ஏற்புடைத்தாகுமிடத்து ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், அக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் அதன் அங்கத்தினர்கள் இப்பணிப்புக்கள் தொடர்பாக அறிவூட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

x. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக, அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/நிறுவனங்களின் தலைவர்கள் பிரதான கணக்கீட்டு அலுவலர்களாக அல்லது கணக்கீட்டு அலுவலர்களாக உள்ளமையால் அரசாங்கத்திற்குரிய ஆதனங்களின் முறையற்ற துஷ்பிரயோகத்தை தவிர்ப்பது உரிய அலுவலர்களுக்குக் கையளிக்கப்படுகின்ற ஒரு பொறுப்பாகும்.

xi. இப்பணிப்புக்களுக்கு அமைவாக நடந்தொழுகாமை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104எஎ ஆம் உறுப்புரைக்கமைய தண்டனை வழங்கப்பட முடிந்த ஒரு குற்றமென்பது குறிப்பிடப்படுகின்றது.

இவ்வேற்பாடுகளில் அரசாங்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரச வங்கிகள் அரச பல்கலைக்கழகங்கள், அரசுக்கு கையேற்கப்பட்டுள்ள கம்பனிகள் என்ற அனைத்து நிறுவனங்கள் மற்றும் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கு அரசிற்கு அல்லது அரச கம்பனிகளுக்கு உரித்தான நிறுவனங்கள் எனப் பொருள்படும்.

அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் என இடப்பட்டுள்ள ஒவ்வோர் இடத்திலும் முன்பு குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டவர்களுமான வேதனம் ஒன்றையோ படி ஒன்றையோ பெற்றுக் கொள்கின்ற அனைவரும் எனப் பொருள்படும்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட 2017.12.04 ஆந் தேதிய 2048/12 ஆம் இலக்க அதி விசேடவர்த்தமானி அறிவித்தல் நீக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.